


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 10.11.2018


We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- **சென்னை** கீழ்ப்பாக்கத்தில் உள்ள அரசு மன நல காப்பக காவல் நிலையத்தில் **கிரைம் அண்ட் கிரிமினல்ஸ் டிராக்கிங் நெட்வொர்க் அண்ட் சிஸ்டம்** என்ற பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வரும் **டெய்ஸி** என்பவருக்கு **தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சிறப்பு புலனாய்வு காவலருக்கான விருது** வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- ஆப்பிரிக்காவின் மலாவியில் **'ஜெய்ப்பூர் காலணி'** முகாமை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தொடங்கி வைத்தார். மேலும் அங்குள்ள பயனாளிகளுக்கு, **இந்திய** தயாரிப்பான **இலவச செயற்கை கால் உறுப்புகளை** வழங்கினார்.
  - மகாத்மா காந்தியின் மனிதநேயப் பணியை கௌரவிக்கும் **'மனித நேயத்திற்கான இந்தியா'** என்ற திட்டத்தின் கீழ் இந்த முகாம் தொடங்கப்பட்டது.

- **2018ம்** ஆண்டு நவம்பர் **02** அன்று **எல் & டியின் காட்டுப்பள்ளி** கப்பல் கட்டும் தளத்தில் புதிய ரோந்து கப்பல் **ஐசிஜிஎஸ் வராஹோ** அறிமுகப்படுத்தப்பட்டது.
  - இந்தியக் கடலோரக் காவற்படையின் 98 M கடலோர ரோந்துக் கப்பல் வரிசையில் இது நான்காவதாகும்.

- **சிங்கப்பூர்** மற்றும் **இந்தியா** ஆகிய நாடுகளுக்கிடையே **கடல்சார் இரு தரப்பு பயிற்சிகள்** நவம்பர் **10 முதல் 21** வரை **அந்தமான்** மற்றும் **வங்காள விரிகுடாவை** மையமாக வைத்து நடைபெறுகிறது.
  - இந்த பயிற்சி **சிம்பெக்ஸ்** என அழைக்கப்படுகிறது.

- **ஆந்திரப்** பிரதேசத்தில் **பழங்குடி பல்கலைக்கழகம்** அமைக்க **மத்திய அமைச்சரவை ஒப்புதல்** அளித்துள்ளது.
  - ஆந்திராவின் விஜயநகர மாவட்டத்தின் **ரல்லி கிராமத்தில்** இந்த பல்கலைக்கழகம் அமைக்கப்படவுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- உலகிலேயே முதல் முறையாக **சீனாவில் செய்தி வாசிக்கும் செயற்கை நுண்ணறிவு ரோபோக்கள்** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
    - செய்திகள் வாசிக்கும் **ஏஐ(artificial intelligence)** ரோபோக்களை **சின்ஹுவா செய்தி நிறுவனம் அறிமுகம்** செய்துள்ளது. ஆங்கிலம் மற்றும் சீன மொழி என இரு மொழிகளில் செய்திகளை வாசிக்க தனித்தனியாக இரண்டு ஏஐ ரோபோக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
    - இது சீன **செய்தி வாசிப்பாளர்களின் தோற்றத்தில்** உருவாக்கப்பட்டுள்ளன.

- பிரான்ஸ் நாட்டின் தலைநகரான **பாரிசில்** இயங்கி வரும் **'எல்லைகளில்லாத பத்திரிக்கை நிருபர்கள்'** என்ற அமைப்பிற்கு உலகம் முழுவதும் கிளைகள் உள்ளன. இந்த அமைப்பின் பிரிட்டன் கிளை சார்பில், பத்திரிக்கை சுதந்திரத்துக்காக **வீரதீரத்துடன் பணியாற்றும் நபர்களுக்கு விருதுகள்** அளிக்க கடந்த ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. அவ்வகையில் **முதல் ஆண்டு விருதுக்கு** இந்தியாவை சேர்ந்த பெண் பத்திரிக்கையாளரான **சுவாதி சதுர்வேதியை** லண்டன் பத்திரிக்கையாளர்கள் அமைப்பு தேர்வு செய்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **குவைத்தில் 11வது ஆசிய ஏர்கன் துப்பாக்கி சுடுதல் போட்டி** நடைபெற்று வந்தது. இதில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் **மனு பாகர், சவுரப் சவுத்ரி ஜோடி** உலக சாதனைப் படைத்து **தங்கப் பதக்கம்** வென்றுள்ளது.

## நியமனங்கள்

- முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி **அசோக் குமார் குப்தா இந்திய போட்டி ஆணையத்தின் (CCI) தலைவராக** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்திய போட்டி ஆணையமானது போட்டியிடுதல் சட்டம் (2002) கீழ் 2003ம் ஆண்டு நிறுவப்பட்டது. 2009, மே மாதம் முதல், முழுமையாக செயல்படத் தொடங்கியது.

# முக்கிய தினங்கள்

- **தேசிய சட்ட சேவைகள் தினம்(NLSD) - நவம்பர் 9**
    - சமுதாயத்தின் ஏழை மக்களுக்கு உதவி மற்றும் ஆதரவை வழங்க 1995ம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றத்தால் தொடங்கப்பட்டது.

We Shine Academy™